அதிகாரம் அழிந்தும் கூடவா ஆதிக்கவெறி?

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (31—10—49) வெளியூர் (1—11—49) [இதழ் 78

பிரிட்டிஷ் பெருந்தன்மை பிரான்சுக்குழேர்படிப்பினை!

விடுதலைக்கு வியட்நாம் மக்கள் தரும் காணிக்கை

விடுதலைப் போரின் சிறு விவரம்

'வளமமிக்க பொருளாதார நிலையே வலிமை மிகக படையாகும்'

என்னும் கருத்தை வியட்னும மக்கள் ஒவ்வொருவா மனத்திலும பதியவைத்துள்ளார். அந்நாட்டுக் குடியாட்சித்தலைவர் ஓஷிமின் என்பார்

வியட்னும் நாடு பிரெஞ்சுக்காரர்களின ஆதிக்கததில் இருந்தது. வியட்னும் மக்கள் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து நின்று, போரிட்டுத் தங்கள் உரிமையை நிலைநாட்டி, வியட்னும் நாட்டில் குடியாட்சியை நிறுவிவிட்டனர் நான்காண்டுகளுக்கு முன்னர்.

எந்த நாடும வளமும் வளர்ச்சியும் பெற்று வாழ்க்கையை உயர்த்திகொள்ள வேண்டுமானுல், அதற்கு அடிப்படையாக இருப்பது வளம் பொருந்திய செல்வ நிலையே என்பதை வியட்னும் குடியாட்சித தலைவராகிய ஓஷிமின் என்பவர் நனகறிநதவராதலின், குடியாட்சி நிறுவப்பட்டவுடனே, பஞ்சத்தையும வறுமையையும எதிர்த்துப் போராடவும், நாட்டின் செல்வ நிலையை நாட்டுத் தேவைகளைச் சரிப்படுத்தக் கூடிய வகையில் பெருக்கவும் முயற்சி எடுததுக்கொண்டார். திட்டங்கள் வகுத்தார். மக்களிடம் சமர்ப்பிதது, அத்துறையில் தொண்டாற்றுமாறு வேண்டிக்கொண்டார்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம், பிரிட்டிஷ் ஏகாதிபததியம் போன்றதன்று. பிரெஞ்சுககாரர்களுக்குத் தங்கள் குடியேறற நாடுகளில் தொழில்கள் வளரவேண்டும் என்னும் அக்கரை இல்லை. ஆனுல் தாங்கள் முதற பணம கொடுத்தால, அதற்கு ஏராளமான வட்டி பெற்றுக்கொள்ளும் வழியுளதா என்று பார்ப்பது தான் அதன் வேலை. எனவே, பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில வியட்னுமில் இருந்த தொழிறசாலைகளும், கைத்தொழில்களும பெயரளவில் தான் இருநதனவே ஒழிய உண்மையில் அவை தக்கவாறில்லை. மேலும் போராட்டம் விரைவில் துவக்கப்பட்டு விட்டபடியால், கைத்தொழில இயந்திர சாதனங்களை அழிக்கத்தான் முடிந்ததே ஒழிய, அவற்றைக காப்பாற்றிப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுபோக முடியவில்லை.

எனினும் வியட்னும் தொழிலாளர் இயக்கத் தலைவர்கள நாட்டுத் தொழிலகள் சிலவற்றிற்குரிய இயந்திரங்களை எப்படியோ பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றிவிட்டார்கள் தென் வியட்னுமில் பல தொழிறசாலைகள படகுகளில் அமைககப்பட்டுப பிரெஞ்சுக்காரர்கள் கண்டுபிடிக்க முடியாமற் செய்யப்பட்டன மத்திய வியட்னுமில் இஞ்சின் தொழிறசாலைகள் பல ஆயிரம் அடி உயரமுள்ள மலைமேட்டுப் பிரதேசங்களுககு அகற்றப்பட்டன. வடக்கு வியட்னுமில், கனதத பெரிய இயந்திரங்கள் மக்கள் தோள்மீது சுமந்து 200, 300 மைல தொலைவு நடந்து சென்று பாதுகாத்தனர்.

இவ்வாறெல்லாம் காப்பாறறிய இயந்திர சாதனங்களைக்கொண்டுதான, விடுதலையடைந்த வியட்னுமில் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருககின்றன. பல இடங்களில் பரவிய வகையில் தொழிற்சாலைகள் நிறுவி, ஆங்காங்குள்ள மக்கள பலர் வேலைககமர்த்தப்பட்டுள்ளனர். நாட்டின் கனிச் செல்வம, நீர்ப்போக்கின் வேகம இவையாவும் நன்கு பயன்படுத்தப்படுகின்றன.

குடியாட்சித் தலைவர் ஓஷிமின அவர்களுடைய போதனைப்படி, அந்நாட்டு மக்கள் சிறு கைத்தொழில்கள் பலவற்றை ஆங்காங்கே ஏற்படுததியுள்ளார்கள் 1947-ம் ஆண்டு முடிவிலிருந்து 1949 துவக்கம வரை. 3 கோடி வியட்னும் நாணயங்களை, வியட்னும அரசாங்கம அந்நாட்டைச் சேர்ந்த பல நூறு சிறு கைத்தொழிலாளருக்குக் கடனுகக கொடுத்து உதவி செயதிருக்கிறது. இவற்றைக் கொண்டு மூலப பொருள்கள் சேமிப்பு கூட்டுறவு முறையில பொருள்கள் உறபததி முதலியவற்றை அந்நாட்டு மக்கள் நிறுவினர்.

போர்க்காலத்திலே வியட்னும நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்குலைககப் பிரெஞ்சுககாரர்கள் முயன்றனர். வியட்னுமுக்கும் வெளி உலகததிற்கும தொடர்பில்லாதபடி செய்தனர். வர்த்தகம்—கைதொழில் முதலியவற்றைக குன்றவைத்தனர். ஆனுல், பிரெஞ்சுககாரர்களின் இம முயறசியால், வியட்னும் பிறர் உதவியின்றித் தன்னைத்தான் காத்துக்கொள்ளும நிலைமையை உண்டாக்கிககொண்டது. அதனுடன் வியட்னும மககள் வசம இருந்த பகுதிகளில் பிரெஞ்சுக்காரர்களுடைய பொருளாதாரத்தை

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

அண்ணமலைப் பல்கலைக் கழக அமளி!

தீய சக்திக்கு நேரிய மாணவர்கள் அறைகூவல்

கலகம் - வீரப் போராட்டமுமல்ல, அமைதிப் போராட்டமுமல்ல

அண்ணமலைநகர், அக். 26—

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஏற்பட்ட அமளிக் காரணமாக இருந்தவர்கள் நடவடிக்கைக் கமிட்டி என்ற பெயரில் 18—10—49-ல் வெளியிட்டுள்ள "துண்டு வெளியீட்டிற்கு அறை கூவல்" என்ற தலைப்பிட்டு, சட்டதிட்டத்திற்குக் கட்டுப்பட்ட மாணவர்கள் வெளியிட்டுள்ள துண்டு அறிக்கை கீழே தரப்படுகிறது:—

மாணவத் தோழர்களே!

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின, சில கம்யூனிஸ்ட மாணவர்களும், அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் சமீப காலத்தில் நடந்துகொண்ட நடத்தை, மாணவர் சமூகம் முழுமைக்குமே என்றுமில்லா அவமானத்தைத் தேடித்தந்து விட்டது. 18—10—49ந் தேதியில் வெளியிடப்பட்டுள்ள துண்டு வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தனையும், வடிகட்டிய பொய்யைத் தவிர வேறில்லை உண்மை வெளி வந்தே தீரும். இறுதியில் உண்மையே வாகை சூடும். அந்த நாளிலே என்ன நடநதது என்பதை ஞாபகப்படுத்திப் பார்ப்போம்.

அது ஓர் வீரப் போராட்டமுமல்ல; அமைதிப் போராட்டமுமல்ல கம்யூனிஸ்ட்கள் செல்வாக்கில் இருககும ஒரு சிறு பிரிவினராகிய மாணவர்கள் செய்த, மரியாதைக் குறைவான, குற்றம் பொருநதிய, ஒரு செயலைத் தவிர வேறு அல்ல. ஆனுல் எல்லா மாணவாகளுக்கும பழி கற்பிக்கும செயல.

கட்டுக்கடங்காத ஓர் மாணவர் கும்பல், கமயூனிஸ்ட முழக்கங்களைச் செய்து கொண்டு, மாணவிகள் விடுதியை நோக்கி ஊர்வலமாய் சென்றது. துணைவேந்தர் அநத இடத்திற்குவிரைந்தார், மாணவர்களை அமைதியாய்க கலைந்துசெல்லுமாறு வேண்டினுர். அவரது வேண்டுகோளை மீறினர்; கலைய மறுத்தனர்; கடுமொழிகளில் திட்டவும் செய்தனர். மகளிர் முன்னிலையில் எந்த நாகரிக மாணவனும் பேசக்கூசும் வசைமொழிகளிலே அவரை ஏசினர். துணைவேந்தர் அக்கும்பலின் கட்டுக்கடங்காத செய்கைகண்டு, அதில் தலையிடவேண்டிய அவசியத்திற்கு உள்ளாக்கப்பட்டார். ஆனுல் தடுக்கப்பட்டார். பேராசிரியர்களின் துணைகொண்டு, அந்தக் கும்பலிலிருந்து வெளியே வந்து, சென்னை மேயர் தங்கியிருந்த விருந்தினர் விடுதிக்கு நடந்து சென்ருர். அந்தக் கூட்டம் முழுதும் அவரைப் பின் தொடர்ந்தது. செஙகல் துண்டு ஒன்றையும் அவர்மேல் எறிந்தனர். அவரைக் கொல்லுங்கள் அவரைக் கொல்லுங்கள்...... இதுதான் அவர்களது போர் முழக்கம். "பதவியை ராஜினுமா செய்"...இதுதான் அன்றைய "தேசியகீத"த்தின் பல்லவி. இத்தகு நிலையிலும துணைவேந்தர் மாணவர்களை அமைதிப்படுத்தினுர். அவர்கள் கோரிக்கையைக் கவனிக்கக காலம் வேண்டுமென்றும், அமைதியாகக் கலைந்து அறைகளுககுச் செல்லுமாறும தானே நேரிலும், பல்வேறு பேராசிரியர்கள் மூலமும் பலமுறை வேண்டினுர். ஆனுல் அந்த மாணவர்கள் செவிசாய்க்கவில்லை. துணைவேந்தரைப் பயமுறுத்த எத்தனித்தனர். இப்படிச் செய்து ஒரு தனி மனிதரை அறைக்குள்ளே தடைப்படுத்தி, வெளியே போகவிடாமல் பன்னிரண்டு மணி நேரம் அடைத்த மாபெருங் குற்றத்தை இழைத்தனர் இதை எப்படி "மாணவர்களின் அமைதியான ஊர்வலம்" என்று அழைப்பது? அப்படி அழைப்பது உண்மைக்கு நேர்முரணுனதாகும். எந்த சமூகமும் இத்தகைய தீயசக்திகளைப் பொறுககாது. அந்தக் கலகக்காரர்களின் காட்டுமிராண்டித்தனமான, கட்டுத்திட்டமற்ற நடத்தைக்கு மாணவர்களின் வேறு பிரிவினர் பொறுப்பேற்க முடியாது. பெரும்பாலான மாணவர்களின் நற்பெயரைக் காப்பாற்ற கம்யூனிஸ்டகளின் இந்தச் செயலைக் கண்டனம் செய்ய வேண்டியிருந்தது! அவர்களது கடமையுணர்ச்சி, துணைவேநதருக்குப் பாதுகாப்பளிககத் தூண்டியது. அதற்காகத் தூய்மையற்ற அந்த

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

சூதாட்டம் காண கவர்னர் ஜெனரல்

குதிரைப் பந்தயத்திற்குப் பரிசு ஏன்?

புதிய டில்லியில் நடைபெறும் குதிரைப்பந்தயத்தில் கவர்னர் ஜெனரல்-ராஜாஜீ கப், வெற்றி பெற்ற இந்தியக் குதிரைக்கு வழங்கப்படும். வேறு நாட்டுக் குதிரைகள் வெற்றி பெற்ருல் வழங்கப்படமாட்டாது. குதிரைப் பந்தயத்தைக் கவர்னர் ஜெனரல் இராஜகோபாலாச்சாரி நேரில் பார்வையிட்டுக் கப் வழங்குவார். இதுதான் காங்கிரஸ் ஆட்சியில் மிக முக்கியமான செயல் போலும்! குதிரைப்பந்தயத்தை ஒழித்துகட்டுவதாகமக்களிடம் திட்டம் அளித்த தீரர்கள் அடங்கிய கட்சித் தலைவர்களின் போக்கு இதுதான். காங்கிரஸ் கட்சி ஏதேனும் மக்கள் மனத்தைக் கவரும ஒன்றைத் திட்டமாகக் கூறிவிட்டுப்பின் அதை நிறைவேற்றுவது பற்றிக் கவலை கொள்வது கிடையாது என்று ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமையா, கூறியதிலிருந்தே காங்கிரஸ்காரர்களின் போக்கு எத்தகையது என்பது விளங்கிவிடும். போதாக்குறைக்கு கவர்னர் ஜெனரல் இராஜகோபாலாச்சாரியார் குதிரைப் பந்தியத்துக்கு விஜயம் செய்து கப், பரிசளிக்கும் செய்தி, காங்கிரஸ்காரர்களுடைய உண்மை நிலை என்ன வென்பதை நன்கு விளக்கக் கூடியதாயிருக்கிறது.

மாலை மணி

சென்னை 31—10—49 திங்கட்கிழமை

மாசடைந்த மாணவர் உலகு!

(I)

"அவருடைய மோட்டார் காரை வெளியில் விட மறுத்தனர்."

"கால் நடையாகச் செல்ல முயன்றபோது, அவரை நடக்க விடாமல், பாதையில் படுத்துக் கொண்டு மறுத்தனர்."

"அவர் கால் சட்டையைப் பிடித்து ஒருவர் இழுத்தார்."

"அவர் முதுகில் ஒரு கல்லும் விழுந்தது."

"கோரிக்கைகளுக்கு இணங்கு; இல்லையேல் பதவியை விட்டு விலகு" என்று கோஷம் கிளப்பினர்"

"கோரிக்கைகளை யோசிக்க அவகாசம் அளிக்கவும் மறுத்தனர்."

"வந்த விருந்ாளி ஆறுதல் கூறியும் நற்பயன் விளையவில்லை."

"நடு நிசிவரை ஆர்ப்பாட்டம் நடத்த வண்ணமிருந்தது."

"போலீசார், அவரை, அவருடைய மாளிகைக்கு இட்டுச் செல்லுவதாகக் கூறினர்."

"போலீசுக்கும் கிளர்ச்சிக் காரர்களுக்கும் கைகலப்பு ஏற்படுமென்று நினைத்து, போலீசாரின் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டார்."

"விடியற்காலை மூன்று மணிக்கு பொறுப்புணர்ச்சி யுடையவர்கள், அவரைப் பாதுகாப்போடு இட்டுச் சென்று, அவர் மாளிகையில் சேர்த்தனர்."

"இப்படிப் பன்னிரண்டு மணி நேரம் விருந்து மண்டபத்தில், அவர், சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்."

"இதனை அறிந்தக் கலகக் காரர்கள். அவரைத் தாக்க, சவுக்குக் கட்டைகளுடன், அவர் மாளிகை நோக்கி வந்தனர்."

"அவரைப்போல் கொடும்பாவி செய்து, ஊர்வலமாக எடுத்துச் சென்று, அவர் மாளிகை முன் வைத்துத் தீயிட்டனர்."

எந்தத் தீயவருக்கு, எந்த நல்லவர்களால், எந்த இடத்தில், இத்தகைய நேர்மையான தீர்ப்பு அளிக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிய ஆவல் கொள்வது இயற்கையாகும்.

இடம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்;—பெருங் குற்றம் புரிந்தவர் துணைவேந்தர்;—இந்த நல்வினை புரிந்தவர்கள் மாணவர்களில் ஒருசிறு பிரிவினர்!

துணைவேந்தர் செய்த குற்றமென்ன? இந்த மாணவர் குழுவின் மனக் குறை என்ன?

மாணவிகள் விடுதிக்குச் செல்லும் பாதையில் சுவர் எழுப்பப்பட்டுவிட்டது. இதனை எடுத்து விட வேண்டுமென்பது இந்த மாணவர்களின் முதல்கோரிக்கை! எவ்வளவு முக்கியமான கோரிக்கை! கல்வி வளர்ச்சியை இப்படிச் சுவர் போட்டுத் தடுத்து விடுவது நீதியாகுமா! துணைவேந்தர் செய்துவிட்டு இருக்கிறார் இவ்வளவு பெரிய, மன்னிக்க முடியாதத் தவறை!

இரவு, பகல், எந்தநேரத்திலும், மாணவ விடுதியின் வாயிற் கதவுகள் திறந்து வைத்திருக்கவேண்டுமென்பது. இந்த மாணவர்களின் மற்றொரு பெரும் மனக்குறை! கதவுகளை மூடிவைத்து விட்டால், எப்படித்தான் 'கல்வி' தேவதை மாணவர்களிடம் வந்து போக முடியும்! இந்த வகையிலும் துணைவேந்தர் மாணவர்களுக்குப் பெருந்தீங்கிழைத்துவிட்டார்!

இந்த இரண்டு குறைபாடுகளும், ஒரு சில மாணவர்களின் தன்மான உணர்ச்சியை, குத்திக் கிளறி விட்டன. மாணவர்களில் சிறு பிரிவினர், ஆர்ப்பாட்ட புரியினர் ஆக மாறிவிட்டனர்.

மாணவர்களின் ஒரு கும்பலினுடைய இந்த இரு கோரிக்கைகளும் நியாயமானதுதான் என்று எவருமே ஒத்துக் கொள்ளமாட்டார்கள். இந்த இரு கட்டுப்பாடுகளினாலும், எந்த ஒரு மாணவருக்கும், மனம் புண்பட வேண்டிய அவசியம் ஒரு துளியும் கிடையாது.

இதுவரையில் மாணவிகள் விடுதிக்குச் செல்வதற்கான பாதையில் சுவர் எழுப்பப்படாமல் இருந்து. இந்தத் துணைவேந்தர் காலத்தில் தான் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது என்றால், அதற்கான நியாயமான காரணம் ஒன்றோ, பலவோ இருந்தாக வேண்டும். போதிய காரணமில்லாமல், வேலி போடும் பணியில் துணைவேந்தர் ஈடுபட்டு இருக்க முடியாது. சூழ் நிலைக்குக் கட்டுப்பட்டுத்தான் சுவர் எழுப்பவேண்டிய நிர்ப்பந்தம் துணைவேந்தருக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை எவரும் யூகித்து அறிந்து கொள்ளலாம். பொருளற்றப் போக்கிரித்தனத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு இல்லாத பொறுப்பும் கடமையும் துணைவேந்தருக்கு உண்டு. பல்கலைக் கழகத்தின் கவுரவத்தையும் கண்ணியத்தையும் காப்பாற்றவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்துணைவேந்தர். எனவே, சுவர் எழுப்பி, தமக்குள்ள கடமையை ஒழுங்காக நிறைவேற்றி இருக்கிறார் துணைவேந்தர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மாணவமாணவிகளின் பெற்றோர்கள், இந்த நற்செயலுக்காகத் துணைவேந்தரைப்போற்றுவார்களே யன்றி இந்தப் பொறுப்பற்ற மாணவர்களைப் போல், பழிக்க முன்வர மாட்டார்கள். இதுபற்றி, சிதம்பரம் நகர மன்றத்தார், துணைவேந்தரை வாழ்த்தியும், கலகக்கார மாணவர்களைக் கண்டித்தும் ஒரு தீர்மானம்நிறைவேற்றி இருப்பதை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

கலகக் காரர்கள் சொல்லுகிறபடியே, மாணவிகள் விடுதிக்குச் செல்லும் பாதையில் சுவர் எழுப்பினது பெருங் குற்றத்தான் என்று வைத்துக்கொண்டு பார்த்தாலும், அந்தச் சுவரை எடுத்தாக வேண்டும் என்று கேட்கவோ, அதற்கான கிளர்ச்சியைத் தொடங்கவோ, காலித்தனமாகத் துணைவேந்தருக்கு இன்னல் சூழவோ, இந்த மாணவர்களுக்கு அருகதைதான் ஏது? அதற்கான உரிமைதான் ஏது?

அந்தச் சுவர் எழுப்பினதில் மாணவிகளுக்கு விருப்ப மில்லாமல் இருக்குமானால், அவர்களாக அல்லவோ, தம்மிச்சையாக முன்வந்து, சுவர் ஒழிப்புப் போரைத் தொடங்கி இருக்க வேண்டும்? துணைவேந்தரை நெருங்கி சுவர் இடிப்புக் கோரிக்கையை வெளியிட்டிருக்க வேண்டும்? மாணவிகளின் அமைதியான போக்குக்கு, அவர் இணக்கம் காட்ட மறுத்தால், அடுத்தபடியாக, அவருக்குத்துன்பம் இழைக்கவும் மாணவிகள் முனைந்திருக்கலாம். அது சமயத்தில் வேண்டுமானால், இந்த மாணவ வீரர்கள், துணைவேந்தரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்திருந்தாலாவது, அதில் ஏதோ கொஞ்சம் நியாயம் இருக்கிறது என்று எண்ண இடமேற்படும். அதுவும், மாணவிகள் வேண்டுகோள் விட்டபின்னர் தான், மாணவர்கள், மாணவிகளுக்கு உதவியாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

பல்கலைக் கழகத்தில் படித்து வருகின்ற காரணத்தினால், தங்களின் உரிமையையும் கடமையையும், மாணவிகள் தெரிந்தே இருக்கவேண்டும். மாணவர்கள் போதித்துத்தான் உரிமை உணர்வு மாணவிகளுக்கு ஏற்படும் என்று எண்ணி, எதிர்ப்பாளர்கள் செயலாற்றினார்கள் என்று சொல்லுவது கொஞ்சமும் பொருத்தமாகாது. பெண் உலகத்தைப் பழிப்பதும் ஆகும் அது. எழுப்பிய சுவரினால் எந்த ஒரு மாணவமாணவியின்மனமும் புண்பட வேண்டிய தேவை அறவே கிடையாது. அவர்களின் தன்மான உணர்ச்சிக்கு இதனால் ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. எனவே, கிளர்ச்சிக் காரர்களின் அட்டூழியத்துக்கு வேறு ஏதாவது காரணமாக இருக்க முடியுமே யன்றி, சுவர் ஒரு காரணம் என்று கூறுப்படுவது மெய் கலவாதப் பொய்யே யாகும்.

பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் படித்துப் பட்டம் பெற வருகிறார்களே யன்றி, தம்மிச்சையாக, நினைத்த பொழுது, இரவு பகலென்று பாராமல், தெருத் தெருவாய் அலைந்து திரிவதற்கு அல்ல. முடிந்த லட்சியம் கல்வியாக இருக்கின்ற பொழுது, அதற்கான சில கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டியது இன்றியமையாதத் தேவையாகிறது. முதலாளித்துவ சமுதாய அமைப்பிலும் சரி, பொதுவுடைமை அமைப்பிலும் சரி ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். மக்களாட்சி கோட்பாடு என்பது வெறும் கைதூக்கிக் கணக்கெடுப்பதோடு மட்டும் நின்றுவிடக் கூடியதன்று; இந்த வெளிப்படை நிகழ்ச்சியைக் காட்டிலும், ஆழப்பதிந்துள்ள அரும் பெரும் பண்புகளைக் கொண்டுள்ள தாகும். வெறும் வேஷத்தைக் கண்டு மட்டும் ஜனநாயகமென்று பேசுவது அதன் உண்மையான உருவத்தை அறிந்திராதவர்கள் செய்கிற சிறு செயலே யாகும். நிற்க.

பல்கலைக்கழகத்திலுள்ள மாணவ விடுதிகளுக்கென சில நிரந்தர விதிகள் உண்டு. அந்த விதிகள் அனைத்தும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரண் செய்யக்கூடியதேயன்றிஅழிவைத் தரக்கூடியதன்று. அந்தவிதிகளுக்குக் கட்டுப்பட்டுத்தான், மாணவ விடுதிகளில், மாணவர்கள் சேர்ந்துள்ளார்கள். சேர்ந்து விட்டப்பிறகு, ஒரு பெரிய கல்வி நிலையத்தின் சீரையும் சிறப்பையும் குலைத்து விடும் முறையில், மாணவர்கள் கிளர்ச்சி செய்வது மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும். கல்வி பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் மாணவர்கள், வாயிற்படி இரவில் சாத்திப் பூட்டப்பட்டு இருப்பதற்காக, இதனால் மாணவர்களின் உரிமை பறிக்கப்படுகிறது என்று ஒரு துளியும் கருத மாட்டார்கள். பெற்றோர்கள் தேடி வைத்துள்ளப் பணத்தை எந்த வகையிலாவது பாழ்பண்ண வேண்டும், அதற்குத்தகுந்தஇடம் பல்கலைக்கழகந்தான் என்று தவறாகத் தீர்மானித்துக் கொண்டு, படிக்கச் சேர்ந்திருப்பதாகப் பாசாங்கு செய்பவர்களுக்குத்தான், அவசியமாக இருந்துத் தீர வேண்டிய கட்டுக் காவல் எல்லாம், உரிமை பறிக்கும் உபத்திரவமாகத் தெரியும். அவர்களுக்கு ஏற்ற இடம், பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாணவ விடுதிகள் அல்ல. நகரத்திலே எங்காவது, நாற்சந்தியாகப் பார்த்து, அவர்கள் தங்கள் படிப்பைத் தொடங்கி இருக்கவேண்டும். அதுதான், அவர்களுடைய பண விரயப் படலத்துக்குத் தகுந்த இடம்.

இந்த மாணவ விஷமிகளின் இரண்டாவது கோரிக்கையான, இரவில் வெளியில் செல்ல முடியாது இருக்கிற தடையை நீக்க வேண்டு மென்ற கட்டுப்பாடு, இந்தத் துணை வேந்தர் காலத்தில் தான் முதல் முதலாக அமுல் செய்யப்பட்டதல்ல. பல் கலைக் கழகத் துவக்கத்திலிருந்தே இருக்கும், ஒரு கண்டிப்பாக இருந்துத் தீர வேண்டிய சாதாரண கட்டுப்பாடாகும். இந்த அவசியமான கட்டுப்பாடு விஷயத்தில், இதனை அகற்றிவிட வேண்டுமென்று கிளர்ச்சி செய்தவர்கள், பல்கலைக் கழகத் தோற்றத்திலிருந்து, எந்த மாணவர்களும் கிடையாது'. இதுவிஷயத்தில் இது வரை, எந்த மாணவர்களுக்கும் ஏற்படாத கோபம் இப்பொழுதுள்ள மாணவர்களில் ஒரு பிரிவினருக்கு மட்டும் ஏற்பட்டிருக்கிறது என்றால், இது எப்படி ஒரு உண்மையான—நியாயமான கோரிக்கையாக இருக்க முடியும்? எனவே இந்தவிஷமிகளின் இரண்டாவது கோரிக்கையும் அடிபட்டு விழுந்து போகிறது.

இருகோரிக்கைகளும்பொருந்தாதவை என்ற பின்னர், துணைவேந்தரைத் துன்புறுத்துவதற்கு வேறுஏதாவது, சொந்தக்காரணம் இந்த விஷமிகளுக்கு இருந்தால் இருக்கலாமே யன்றி, வேறு உண்மையான காரணம் இருக்க முடியாது.

இவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு எடுத்துக்கொண்டுள்ள இரு பொருந்தாதக் காரணங்களிலும் நியாயம் இருப்பதாக விவாதத்திற்காகவே வைத்துக்கொண்டு பார்த்தாலும், இதனை ஏன் முன்கூட்டியே துணைவேந்தரை நேரடியாகச் சந்தித்து, விஷயத்தை விளக்கி அன்பு முறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடாது? ஏன் தவறிவிட்டார்கள், இந்த மாணவர்கள் இதனைச் செய்ய? துணைவேந்தரை ஒரு பொருட்டாக மதித்து, பேட்டி கண்டு கோரிக்கைகளை வெளியிடுவது, இந்த மாணவர்களின் கண்ணியத்துக்கே குறைவான செயலாகும் என்று இவர்கள் தீர்மானித்து, முதலிலேயே நேரடி நடவடிக்கையில் கலந்து கொண்டார்கள் என்று சொல்லப்படுவதானாலும்,பொதுவாக மற்ற மாணவர்களில் எல்லாம் அதற்கான கிளர்ச்சியைத் தொடங்காமல், குறிப்பாகப் பல்கலைக் கழக 'ஸ்தாபகர்தின'த்தை ஏன் ஆர்ப்பாட்டம் செய்வதற்குஏற்ற நாளாகக் கொண்டார்கள்? இதில் மறைந்து கிடக்கும் உண்மை என்ன? ஸ்தாபகர்தினமாகப் பார்த்துக் கிளர்ச்சியைத் தொடங்கினால்தான்,இந்தஇருபெரும் நேர்மையான கோரிக்கைகளிலும் வெற்றி நிச்சயம் கிடைக்குமென்று முடிவிற்கு வந்து, ஆர்ப்பாட்டம் புரிந்தார்களா? தேவை, விளக்கம் இதற்கு!

அயல்நாட்டுப் பத்திரிகைகளுக்குப் பாராட்டு

தன் நாட்டுப் பத்திரிகைகளுக்கு...?

"பத்திரிகைகள் நான் பேசிய சிலவற்றையும், எழுதிய சிலவற்றையும் கண்டித்திருந்தன. இந்தக் கண்டனங்களைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்தக் கண்டனங்கள், பத்திரிகைகள் எவ்வளவு வெளிப்படையாகவும் விஷயங்களை அறிந்துகொள்ளும் ஆர்வத்துடனும் இருக்கின்றன என்பதையே காட்டுவதாக உள்ளன."

என்று பண்டிதர் நேரு சிகாகோ நகரமக்கள் அளித்த விருந்தொன்றின் போது பேசியிருக்கிறார். பத்திரிகைகள் வெளிப்படையாகவும் விஷயங்களை அறிந்துகொள்ளும் ஆர்வத்துடனும் இருப்பதை நேரு வரவேற்கிறார். அவை கூறும் கண்டனங்களைக் களிப்புடன் ஏற்றுக்கொள்ளுகிறார். அதாவது பத்திரிகை தர்மம் இன்னது என்பதை அறிந்து பாராட்டுகிறார். ஆனால், பண்டிதர் அமெரிக்காவிலே பத்திரிகைகளுக்கு இங்ஙனம் பாராட்டு வழங்கும் இதே நேரத்தில் தான், இந்தியாவிலே பத்திரிகைகள் பயந்து வாழவேண்டிய நிலை இருந்து வருகிறது. இந்நாட்டுப் பத்திரிகைகள் எந்த விஷயத்தையும் வெளிப்படையாக எழுதி குறைகளைக் கண்டிக்க முடியாது. உள்ளதை உள்ளபடியே எடுத்துக்கூற உரிமையில்லை. அரசியலாரிடம் காணப்படும் ஊழல்களை, அரசியலார் உள்ளத்தைத் தொடும் முறையில் ஏதாவதொரு மாற்றுக் கட்சி இதழ் எடுத்துக்காட்டி விடுமேயானால், வந்தது மோசம்! எழுதியவர் எங்கே, பத்திரிகை உரிமையாளர் எங்கே, அச்சகத்தார் எங்கே, கூப்பிடு அவர்களை; 'கொண்டுவா ஆயிரக்கணக்கில் ஜாமீன்' என்று உத்தரவிடும் முறையிலே இங்கு—ராமராஜ்யத்தில்—தர்பாராட்சி நடைபெறுகிறது இதுதான் இங்கு கருத்து வேற்றுமைக்கு நமது காங்கிரஸ் அரசியலார் தரும் கண்ணியமான பரிசு!

இந்நிலை மாறவேண்டும். மாறுபட்டக் கருத்துகள், கண்டனங்கள், வெளிப்படை உண்மைகள் ஆகியவை ஏட்டிலே இடம் பெற்று நாட்டிலே உலவ இடமளிக்க வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரமுடியும். அயல் நாட்டுப் பத்திரிகைகளுக்கு மாத்திரம் பாராட்டுதலை வழங்கிவிட்டு, உள்நாட்டுப் பத்திரிகைகளைக் கண்டு உறுமுவது சரியல்ல, நீதியுமாகாது என்பதைப் பண்டிதரும் அவருக்குத் துணையாகநிற்கும் இந்திய ஆட்சியாளரும் உணரவேண்டுகிறோம்.

ஏழைகள் நலன் பெற வழியில்லை

ரயில் வண்டிகளில் மீண்டும் 4 வகுப்புகள்

புதிய பாகுபாடு-துன்பத்தை வளர்ப்பதே

ரயில் வண்டிகளில் முன்னர், முதல், இரண்டாம், இண்டர், மூன்றும் வகுப்புகள் என நான்கிருந்தன. பிறகு அவற்றை மாற்றி முதல், இடை, கடை என மூன்று வகுப்புகளாக்கப் பட்டன. இப்போது மீண்டும் முதல் வகுப்பு, விசேஷ இரண்டாம், வகுப்பு சாதாரண இரண்டாம் வகுப்பு, மூன்றும் வகுப்பு என நான்காக்கும் முறையைப் புகுத்த இந்திய அரசாங்கத்தினர் முனைந்து விட்டனர்.

இவ்வண்ணம் முதலிருந்ததை மாற்றி மறுபடியும் பழைய முறையையே கையாளுவதால், பொது மக்களுக்கு ஏதேனும் நன்மையுண்டா எனப்பார்த்தால், அதுதான் இல்லை. இவ்வாறு மாற்றியமைத்ததன் மூலம் அரசாங்கத்துக்கு லட்சக்கணக்கில் பணம் செலவழிந்ததைத்தவிர, அதனால் பெரும் நலனை அடைந்தபாடில்லை. ஏழை மக்கள் நலனுக்குப் பதிலாகத் துன்பங்களைத்தான் அடைய முடிந்தது. பழைய முறையில் ஏழைமக்கள் அடைந்திருந்த சில வழிகள்கூட இந்த மாற்றங்கள் காரணமாகப் போய் விட்டன. பொதுவாக மக்களுடைய சங்கடங்களையும் துன்பங்களையும் வளர்க்கவே, இம்மாற்றங்கள் பயன்பட்டிருக்கின்றனவே ஒழிய, இவற்றால் எவரும் எந்தவிதமான நன்மையும் அடைய முடியவில்லை.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் விசேஷ இரண்டாம் முன்னர் ரயில்வே கட்டணம் 25 சதவிகிதம் உயர்த்தப்பட்டது. பின்னர் வகுப்பு மாறுதல்கள் வந்தபோது, முதல் இரண்டு வகுப்புக் கட்டணங்கள் மட்டும் விசேஷமாகக் குறைக்கப்பட்டனவே ஒழிய, மூன்றுவது வகுப்புக் கட்டணம் குறைக்கப்படவில்லை. கட்டண விகிதம் அதேபோன்றுதான் இருக்கும் என ரயில்வே மந்திரி அறிவித்து விட்டார். உண்மையில் ரயில்வேயில் அதிக வருமானம் கிடைப்பது 3-வகுப்புப் பிரயாணிகளால் தான். வசதிக் குறைவும் அவர்களுக்குத்தான். குறைந்த வசதிகளைப் பெற்று நிறைய அரசாங்கத்திற்கு இலாபம் வரக்கூடியவாறு செய்பவர்கள் ஏழைகளாயுள்ள 3-வது வகுப்புப் பிரயாணிகளே. அப்படியிருக்க, இப்போது பழைய நிலைக்கே வகுப்புப் பாகுபாடுகளை மாற்றியும் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதைக் குறைக்கப்போவதில்லை என்பது பெரிதும் கண்டனத்திற்குரிய செயலேயாகும்.

ரயில் வண்டிகளில் மேல் வகுப்பு, கீழ் வகுப்பு என்று இரண்டு இருந்தாலே போதும். ஆனால் இதுபற்றி அவர்கள் கவனித்திருப்பதாகவே இல்லை. ஆனால், 4-வது வகுப்பாக மாறப்போவதையும் முதல், இரண்டாவது, இண்டர், மூன்றுவது வகுப்பு என்று பழையபடி மாற்ற வகுப்பு, சாதாரண இரண்டாம் வகுப்பு என மாற்றியமைத்து அதிகக்கட்டணம்வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதும் சரியல்ல.

எனவே, ஏழைகளுக்குரிய 3-வது வகுப்பு, இண்டர் வகுப்புக்கட்டணங்களைக்குறைக்கவும், அவர்களிடமிருந்து வாங்கும் கட்டணத்துக்குக் குறைந்த அளவு வசதிகளைச் செய்து செய்து கொடுக்காதிருப்பதை ஒழித்து, அவர்களுக்கும் இரவில் உறங்குவது உட்படக் குறைந்த அளவு வசதிகளையாவது செய்து கொடுக்க முன்வர வேண்டும். அப்படிச்செய்யாமலிருப்பது அதிக லாபத்திற்கு மூல காரணமாயுள்ள ஏழைமக்களின் உரிமைகளைப் பறிப்பதேயாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம்

★

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

274

ஊழல்கள் ஒழிய வழி எது?

ஆட்சிப்பீடத்தார் முயற்சி எதிர்க் கட்சி இல்லாமற் செய்வதே

"நாட்டில் ஏற்பட்டுப்பெருகிக் கொண்டு வரும் இலஞ்ச ஊழல், கள்ளமார்க்கட், பதுக்கல் முதலிய தீமைகளை உடனடியாகப் போக்க வேண்டும். இவற்றைப் போக்க, பொது மக்கள் மனநிலையை உயர்த்த வேண்டும். இத்தீமைகளைக் கடுமையாகக் கண்டித்துத் தண்டித்து அடக்க வேண்டும்" என்று காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமையா, சென்னை பிரசிடென்சி கலாசாலை மாணவர் கூட்டத்தில் பேசினார்.

இந்தியாவின் முதலமைச்சராகிய பண்டித நேரு கூட, அமைச்சர் பதவி பெறுவதற்கு முன் கள்ளமார்க்கட்காரர்களைத் தூக்கிலிட வேண்டுமென்றார். அமைச்சர் பதவி அவருக்குக் கிடைத்தது. ஆனால் தூக்குமேறிய கள்ளமார்க்கட்காரர்கள் ஒருவராவது உண்டா? ஏன் அவர் அமைச்சர் பதவி பெற்றதும் கள்ளமார்க்கட்டே இல்லாமற் போய்விட்டதா? இருக்கிறது. முன்னை விடப் பன்மடங்கு ஆதிக்கத்துடன் கள்ளமார்க்கட் இருக்கிறதென்பதைப் பொதுமக்கள் அன்றாட வாழ்வில் அறிந்துவருகின்றனர். இருந்தும் தூக்குமேடைக்குக் கள்ள மார்க்கட்காரர்களைக் கொண்டு வர முடியவில்லை பண்டித நேரு அவர்களின் ஆட்சியால்.

இவ்வாறே நாட்டில் தலைவர்கள் என்போர் ஒவ்வொருவரும் மேடைமீது ஏறியவுடன் கள்ளமார்க்கட், இலஞ்ச ஊழல் முதலியவற்றை ஒழித்துத் தீரவேண்டும் என்று பேசுவதில் குறைவில்லை. ஆனால் அதிகாரபதவிகளைப்பெற்றிருந்தும் அவர்களால் இந்த இரண்டு வித ஊழல்களையும் தடை செய்ய முடியவேயில்லை.

இதற்குக் காரணம் என்ன? இவற்றை ஒழிக்க அதிகாரபதவியிலிருப்போர் அக்கறை கொள்ளவில்லை. ஆட்சிப்பீடத்தாரின் அக்கரையெல்லாம் தங்களுக்கு எதிர் கட்சி என்பதொன்றுமே இல்லாமற் செய்துவிட வேண்டும். இவ்வாறு எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கு புதிய சட்டங்களையும், பழைய சட்டங்களைப் பயன்படுத்தும் வழிகளையும் கண்டுபிடிக்கவேண்டும். எதிர்ப்புக்கருத்து நாட்டில் பரவவிடாதபடி தடுக்கவேண்டும். எதிர்க்கட்சி நூல்களைப் பறிமுதல் செய்ய வேண்டும், அவற்றை வெளியிடும் அச்சுக்கூடங்களை ஜாமீன் கேட்பதன் மூலம் அடக்கவேண்டும், அவர்களுக்கு உதவியாயிருப்பவர்களிடம் போலீஸ்காரர்களைத் தகவலறிவதற்கு என்னும் பேரால் பலமுறை அனுப்பித் தொல்லை கொடுத்து ஆதரவில்லாதபடி செய்ய வேண்டும் என்னும் திட்டங்களைத்தவிர ஆட்சிப் பீடத்தார், ஊழல்களை ஒழிக்கத் திட்டம் போடுவதாகத் தெரியவில்லை. ஊழல்களை அடக்கத் தங்கள் அதிகாரத்தை, இரகசிய போலீஸ் படையைத் திறமையை, சட்டங்களைப் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

காங்கிரஸ் கொடியை வீட்டின் மீது பறக்கவிட்டு, கதர்க் குல்லாவைத் தலைமீதணிந்து கொண்டிருந்து விட்டால் போதும். அவர்களின் கள்ளமார்க்கட் வேலை வெளிப்படாமற் போய்விடுகிறது. பெரிய செல்வர்கள் கள்ள மார்க்கட் வேலை வெளிப்படுவதில்லை. பெரிய பதவியிலிருப்பவர்களின் இலஞ்ச ஊழல் வெளிப்படுவதில்லை. வெளிப்பட்டாலும் சில பெரிய பதவியாளர்களுக்கு உத்தியோக மாற்றம் ஏற்படுகிறதே ஒழிய வேறு எந்த விதத் தொல்லையும் ஏற்படுவதில்லை.

எனவே, கள்ள மார்க்கெட், இலஞ்ச ஊழல் ஒழிப்பு என்பவையனைத்தும் மேடைப் பேச்சளவில்தான் இருக்கின்றனவே ஒழிய, செயலளவில் அனைத்தும் நாட்டில், காங்கிரஸ்காரர்களுக்கு எதிரான கட்சியில்லாமற் செய்து விடுவதில்தான் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றன.

இந்த நிலைமாறி, காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பீடத்தில் இருக்கையிலாவது கட்சி வெறியை மனத்திற் கொள்ளாமல், நாட்டு நலன், பொது மக்கள் உயர்வு என்பவற்றை நாட்டத்தில் கொண்டு வேலை செய்ய முன்வந்தாலன்றி, நாடு நலன் பெற முடியாது. வெறும் மேடைப் பேச்சில் ஊழலை ஒழிக்கப்போவதாகக் கூறிக்கொண்டு திரியும் வித்தையை நீண்டநாள் வரை மக்கள் நம்பிக்கொண்டிருக்கவுமமாட்டார்கள். மக்களுக்கு இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி, அவர்கள் மனத்தில் உண்மையை விளங்குமாறு செய்யும் திராவிடர்களின் பத்திரிகைகள், புத்தகங்களைத் தடை செய்துவிடுவதாலேயே எதிர்க்கட்சி இல்லாதபடி செய்துவிடவும் முடியாது.

எனவே, ஆட்சிப்பீடத்தை அலங்கரிக்கும் காங்கிரஸ்காரர், வீண் முயற்சியில் இறங்கித் தங்கள், கவனத்தையும் நேரத்தையும் அரசாங்கப் பொதுப் பணத்தையும் செலவிட்டுக் கொண்டிருப்பதை விட்டு, முதலாளிகளைக் கண்டு அஞ்சியஞ்சிச் சாவதைவிட்டு, பதவிப்பித்தை விட்டு, நாட்டு நலன் ஒன்றைக் கருத்திற்கொண்டு துணிந்து தொண்டாற்றினாலன்றி, ஊழல்கள் ஒழியமாட்டா.

இமயம் முதல் குமரிவரை வடமொழி கட்டாயமொழியாக்கப்படவேண்டுமாம்!

தோழர் கட்ஜு காணும் கனவு!

நடவாத காரியம், பலியாத கனவு!

"ஒரு சட்டசபை மூலம் அரசாங்க மொழி உருவாக்கப்பட்டுவிட முடியாது. கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரை பேசப்படும் மொழியே அரசியல் மொழியாக இருக்கமுடியும். பள்ளிக்கூடங்களில் செகண்டரி கட்டத்திலிருந்து கடைசிவரை சமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாக வைத்து மொழித் தகராறை ஒரேயடியாக ஒழித்துவிடுவது தான் விரும்பத்தக்கது"

-என்று கல்கத்தாவில் "பிராசவாணி மந்திர" என்னும் ஸ்தாபனத்தில் சமஸ்கிருத பண்டிதர்கள் கூட்டத்தில் பேசியபோது மேற்கு வங்க கவர்னர் தோழர் கைலாசநாத கட்ஜு பேசியிருக்கிறார். மொழிப் பிரச்னை பற்றிய தகராறு ரப்பரைப்போல நீண்டுகொண்டே போகும் இந்த வேளையில் தோழர் கட்ஜு அந்த மொழிப் பிரச்னையை ஒரேயடியாக ஒழித்துக் கட்டக் கூறும் இப்படிப்பட்ட யோசனையில் ஒரேயடியாக அறியாமையும் ஆணவமும்தான் குடிகொண்டிருக்கின்றனவேயன்றி உருப்படியான பலன் தரும் சரக்கு ஒன்றுமேயில்லை.

இமயமுதல் குமரிவரை சமஸ்கிருதம் கட்டாயமாகப் போதிக்கப்படவேண்டுமாம். இப்படிச் செய்வதன்மூலம் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதைந்து போயிருக்கும் ஆரியத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமாம்! எப்படி யோசனை! வடநாட்டைப் பொருத்தவரையிலாவது ஓரளவுக்குப் பெரும்பாலோரால் பேசப்படும் இந்தி மொழிக்கிருக்கும் எதிர்ப்பைச் சொல்லத்தரமன்று. தென்னாட்டிலே அதனை அண்டவிடோம் என்கின்றனர் திராவிட மக்கள். அரசியல் நிர்ணய சபையில் அண்மையில் இந்திப்பிரச்னை பட்டபாட்டைச் சொல்லத் தேவையில்லை. இந்தியைக்கட்டாயமாகத் திணிப்பது சர்வாதிகாரச் செயல் என்பதை இந்திய முதலமைச்சர் பண்டித நேருவே அழுத்தந்திருத்தமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இங்ஙனம் சமஸ்கிருதத்தின் வழிவந்த இந்தியே இந்தப்பாடுபடும் போது, சமஸ்கிருதத்தை சர்வ வியாபியாக்க, அதுவும் கட்டாயமாகச் செய்யவேண்டும் என்று நினைக்கிறாரே தோழர் கட்ஜு இதனை என்னவென்று சொல்லுவது!

அவர் மேலும் பேசியபோது ஒரு முக்கியமான விஷயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். அதாவது, தமிழ் உருது, பாரசீகம் ஆகிய மொழிகள் தனிமொழிகள், சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவையல்ல என்று பேசியிருக்கிறார். தமிழ், சமஸ்கிருதத்திலிருந்து பிறந்ததல்ல என்பதை ஒப்புக்கொள்ளும் இவர் திராவிடமொழிகளாகிய தெலுங்கு, மலையாளம், துளுவு, கன்னடம் ஆகிய மொழிகள் தமிழிலிருந்தே தோன்றிய மொழிகள் என்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அப்படி ஒப்புக்கொள்ளுவாரானால் சமஸ்கிருதமோ, அதன் வழிமொழியாகிய இந்தியோ திராவிட நாட்டில் ஆதிக்கம் பெறமுடியாது என்பதையும், அவர் எண்ணப்படி குமரி முதல் இமயம்வரை சமஸ்கிருதம் கட்டாய பாடமாவது நடவாத காரியம்—பலியாத கனவு என்பதையும் உணர்வாராக.

லியாப்போல்டு திரும்பி வருவார்?

நாடுகடத்தப்பட்ட லியாப்போல்டு மன்னரின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கடந்த 26-ம் தேதி இரவு பெல்ஜியன் செனட் கூட்டத்தில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. மன்னர் லியாப்போல்டு தனக்கு 55 சதவிகிதத்துக்குக் குறைந்த வாக்கு கிடைத்தால் விட்டுக் கொடுப்பதாகச் சென்ற வாரம் கூறினாராம்.

சந்தா விவரம்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருட சந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வெள்ளையர் ஏகாதிபத்தியம் ஒழிந்தது—

இனி வடநாட்டுக் கொள்ளையர் ஆதிபத்தியம் ஒழியவேண்டும்!

—(0)—

தேனியில் ஆசைத்தம்பி

தேனி, அக். 26—

இன்று மாலை 6 மணிக்கு பிரமாண்டமான ஊர் வலத்திற்குப் பின்னர் இவ்வூர் திராவிடமுன்னேற்றக்கழகத் துவக்க விழா செயலாளர் தோழர். சோ. பழனிச்சாமி முன்மொழிய, தோழர் இ. செல்லையா வழிமொழிய, தோழர் இரா. துரைராசன் தலைமையில் என்றுமில்லா சிறப்போடு நடந்தேறியது. தலைவர் முகவுரையில் வாக்கப் போராட்ட வரலாற்றைச் சரித்திரச் சான்றுகளோடு விளக்கிப் பேசினர்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

அடுத்து விருதுநகர் தோழர், ஏ.வி.பி. ஆசைத்தம்பி பேசியதின் சுருக்கம் வருமாறு:—

“இது வரை திராவிடர் கழகத்தின் பேச்சாளர்களாக இருந்த நாங்கள் முன்னேற்றக் கழகத்தினராக மாறியிருக்கிறோம். பலர் செய்த தவறுகளை இது வரை நாங்கள் எப்படிக் கண்டித்தோமோ, அதே போல், எங்கள் பெரியாரையும், அவர் செய்த தவறை சுட்டிக்காட்டி, கண்டிக்க முனைந்தோம். அதன் அறிகுறியாக வெளியேறி வேறு கழகம் அமைத்தோம்.

ஆளுக்கொரு நீதியா?

எங்கள் கழகத்தைப்பற்றி நீங்கள் தவறாக உணர்ந்திருக்கிறீர்கள். தனிப்பட்டயாரும் எங்கள் விரோதிகளல்ல. காங்கிரசையும், பிராமணர்களையும் ஒழிக்க வேண்டும் என்பது அல்ல எங்கள் வேலை. அவர்களிடம் உள்ள தவறுகளை, குறைபாடுகளை திருத்திக்கொள்ள வேண்டுகிறோம். இது தவறா? எங்கள் தலைவரையே நாங்கள் திருத்த வேண்டவில்லையா? வெள்ளைக்காரன் ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டும் என விரும்பினோம். ஏகாதிபத்தியம் ஒழிந்தது. அதே வெள்ளையனைப் போல, நம் நாட்டைக் கொள்ளையிடும் வட நாட்டவர் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்று கூறுகிறோம், இதில் என்ன தவறு? இன்றைய இந்திய ஆட்சியிலே வட நாட்டுக்கு ஒரு நீதி, தென்னாட்டுக்கு வேறொரு நீதி கற்பிக்கப்படுகிறது. உதாரணமாக, உங்கள் ஊர் வழியாக ஓடிய மதுரை போடி இரயிலை மீண்டும் ஓட்டும்படி, இரயில்வே மந்திரியாரைப் பேட்டி கண்டு நீங்களும் போடி மக்களும் கேட்டீர்கள், அவர் என்ன பதில் அளித்தார்? இந்த லைனில் இரயில் ஓடினால் வருடத்திற்கு லட்ச ரூபாய் நஷ்டம் வருகிறது. அதை நீங்கள் தரத் தயாரா? தருவதாக இருந்தால், மீண்டும் போட ஏற்பாடு செய்கிறேன், என்று கூறினார். நியாயந்தானே என்பர் சிலர். ஆனால் நீங்கள் சிந்திக்க வேண்டும். உண்மையை ஆராய வேண்டும். இந்தியாவில் ஓடுகிற இரயில், நம் பகுதியில் ஓடுகிற தென்இந்திய இரயில் மிக இலாபகரமாக ஓடுகிறது. இலாபம் இருந்தும் சமீபத்திலே மைலுக்கு ஒரு பைசாவாக டிக்கட் கட்டணத்தை அதிகரித்தார்கள், எல்லா இடங்களிலும், ஏன்? வடநாட்டில் ஓடுகிற இரயில்களில் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டவே இந்த கட்டல் முறை இங்கும் கையாளப்பட்டது. உங்கள் பகுதியில் ஏற்படும் நட்டத்தை இங்குள்ள வியாபாரிகள் கட்டினால் இரயில் போடுகிறேன் என்று உரைத்த மந்திரியாரைக் கேட்கிறேன், வடநாட்டு நட்டத்தை ஈடுபடுத்த இந்த ஏன் கட்டணத்தை உயர்த்த வேண்டும்? வடநாட்டு வியாபாரிகளிடம் வசூலிக்கலாமே? தர மறுத்தால், போடி லைனைப் பிடுங்கியது போல வடநாட்டிலும் இரயிலை நிறுத்தி இருக்கலாமே? செய்தார்களா? இப்படிப்பட்ட நீதிதான் இன்று நமக்குக் கிடைக்கிறது.

வரவு செலவு இங்கு ஆனால் வரிப் பணம் அங்கு

இது மட்டுமல்ல. இங்கு நீங்கள் வியாபாரம் செய்கிறீர்கள்,

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

ஆனால் வருமான வரி வடநாடு போகிறது. பீடி, சுருட்டு இங்கே வாங்கிக் குடிக்கிறீர்கள், அந்தத் துட்டும் வடநாடு போகிறது. தபாலாபீசில் ஒரு கார்டு முக்காலணாவுக்கு வாங்கினாலும், ஒரு அணாவுக்கு இரயில் டிக்கட் எடுத்தாலும் இரண்டும் வடநாடுதான் போகிறது. இந்தப் பணமெல்லாம் ஏன் இங்கேயே இருக்கக் கூடாது? சென்ற வருட பட்ஜட்டிலே நாலு கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கும்போது, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்போது, பலருக்கு படிக்க போதிய பள்ளியும், பணமும் இல்லாதிருக்கும்போது, வீடில்லாமல் நடுத்தெருவிலே படுக்கவேண்டிய நிலை இருக்கும்போது, எல்லா இடங்களுக்கும் சரியான ரோடும், பாலமும், மின்சார விளக்கும் இல்லாதிருக்கும்போது, வரிப் பளுவைச் சுமக்க முடியாமலிருக்கும்போது, நமது பணம் வடநாடு போக வேண்டுமா? போவது முறையா? இவ்வளவு பணம் கொட்டி அழுகிறோமே நமக்குச் சரியான நீதி உண்டா? நேருவின் நேசமும், படேலின் பாசமும் நமக்குத் தேவை என்றால், அதைக் கோடிக் கோடியாகக் கொட்டிதானா பெறவேண்டும்? இதைவிட நேசமாக இருக்க வேறு மார்க்கம் இல்லையா? பிரிட்டிஷ் காமன்வெல்த்தோடு எந்த நாடாவது சேரவேண்டுமானால் இன்று நாம் வடநாட்டுக்குக் கொடுப்பது போல, சில வரிகளைக் கப்பமாகக் கட்டவேண்டும் என ஒரு விதி இருந்தால் நாம் சேருவோமா? எந்த நாடாவது சம்மதிக்குமா? நீங்களே யோசித்துப்பாருங்கள்! வடநாடு செல்லும் பணத்தைத் தடுக்க வேண்டாமா? பணம் வடநாடு போவதைத் தடுத்தால் நம் பட்ஜட் துண்டு விழாது; வரிப் பளுவு இராது; நம் தேவையை எல்லாம் பூர்த்தி செய்யலாம். இதற்காகத்தான் திராவிட நாட்டுப்பிரிவினை கேட்கிறோமே தவிர யார் மேலும் கொண்ட வெறுப்பால் அல்ல. எனவே இந்த இலட்சியத்திற்காக உழைக்கும் முன்னேற்றக் கழகத்தைப் பலப்படுத்துங்கள்; பக்கத்து ஊர்களில் பரப்புங்கள்; அங்கத்தினர்கள் சேருங்கள்” என்பதாக உணர்ச்சியோடு $1\frac{1}{2}$ மணி நேரம் பேசினர்.

தேனியில் எந்த விதக் கலவரமும் இன்றி மிக அமைதியாக நடந்த கூட்டம் இதுதான். கூட்டத்திற்குத்தேனியைச்சுற்றிலும் உள்ள கிராம மக்களும், மாணவர்களும் வந்திருந்ததோடு, திருமலாபுரம், போடி நாயக்கனூர், சின்னமனூர், அமச்சாபுரம், வடுகபட்டி ஆகிய இடங்களில் இருந்தும் இயக்கத்தோழர்கள் பெருவாரியாக வந்திருந்தனர். தோழர் ஆசைத்தம்பிக்கும், துரைராசனுக்கும் தேனி திராவிடமுன்னேற்ற மாணவர் கழகம், சின்னமனூர், அமச்சாபுரம், திருமலாபுரம், ஆகிய கிராமங்களின் முன்னேற்றக் கழகங்களின் சார்பாகவும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆசைத்தம்பி பதில் அளித்தார். தலைவர் முடிவுரையில் காங்கிரஸ் சர்க்காரின் அடக்கு முறையை விவரித்துப்பேசும்போது, அண்ணாவைச் சிறையில் தள்ள வழக்கு போட்டிருப்பதையும் கண்டித்துப்பேசினார். செயலாளர் தோழர் பழனிச்சாமி நன்றி கூற, ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்ற போர்ஒலியோடு கூட்டம் இனிது முடிந்தது.

(ந-நி.)

திராவிடர்கள் அறிந்திருந்த மணிபார்க்கும் முறை

வேதகாலத்திற்கு முன்னரே திராவிடர்கள் வான நூற் புலமை பெற்றிருந்தார்கள் என்பதைமெய்ப்பித்ததற்குரிய சில சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

தூண்கள், தம்பங்கள் முதலியவற்றை ஏற்படுத்தி அவைகளின் மூலம் சூரிய—சந்திர, நட்சத்திரங்களை அறிந்து, கால-நேர அளவுகளைக் குறித்து வந்தனர் அக்காலத் திராவிட அறிஞர். அனகபல்லியில் இத்தகைய தூண்கள் இன்னும் சில உள. அங்கு ஒரு பெரிய தூணும், மூன்று சிறிய தூண்களும் இருக்கின்றன. நடுப்பகல், நடு இரவு காலங்களில் சிறிய தூணின் நிழல் சரிபாதியாக விழுகிறது. மேலும் இவை கிழக்கு மேற்குத் திசைகளையும் காட்டுகிறது.

இரவில் பெரிய தூணின் உச்சியைச் சிறிய தூணின் நடுவிலுள்ள ஒரு துளை வழியே பார்த்தால் துருவ நட்சத்திரம் அதை ஒட்டியது போலத் தெரிகிறது. இவ்வாறு வேதகாலத்திற்கு முன்னரே, திராவிட மக்கள் வானநூலில் புலமை அடைந்திருந்தனர்.

அதிகாரம் அழிந்தும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியட்னாம் வாசிகள் குன்ற வைக்கத் தொடங்கிவிட்டனர்.

பிரெஞ்சுக்காரர்களுடைய முட்டுக்கட்டையால், வியட்னாமின் மூன்று பகுதிகளிலும் சிறிது சங்கடம் ஏற்பட்டதெனினும், தலைவர் ஓஷிமின் வியட்னாமைப் பல துண்டுப் பகுதிகளாகப் பிரித்து, அவ்வப் பகுதியும் தன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கேற்றவாறு அமைந்துவிடத் திட்டங்கள் வகுத்தார். இப்போது அந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுப் பிரெஞ்சுக்காரர்களின் முட்டுக்கட்டைத் திட்டங்கள் முறியடிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆண்டுகளாகக் கடற்கரைகளிலிருந்து உப்புக் காவடிகள் மக்கள் தூக்கிக்கொண்டு 200 மைல் தொலைவி வரை உட்பிரதேசங்களுக்குச் சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.

போர் துவக்கப்பட்டதற்குப் பின், பெரிய சாலைகள், ரயில் பாதைகள், பாலங்கள் எல்லாம் தகர்க்கப்பட்டுவிட்டன. பெரியபெரிய நகரங்கள் தரை மட்டமாயின. 3 லட்சம் மக்கள் வாழ்ந்துகொண்டிருந்த வன். வந்துவி என்னும் இரட்டை நகரங்கள் இன்று வெருங்காடாகக் காட்சியளிக்கின்றன.

இவ்வாறு அழிவு வேலைகள் ஒருபுறம் நடந்துகொண்டிருந்தனவெனினும் ஆக்கவேலைக்குரிய திட்டங்களை வியட்னாம் அரசாங்கம் உள்நாட்டுப் பகுதிகளில் செய்துகொண்டே வந்தது. தண்ணீர் வேகத்தைப் பயன்படுத்தும் திட்டங்களை யெல்லாம் கையாண்டது. கடந்த 3 ஆண்டுகளில் அணைக்கட்டுகள், கால்வாய்கள் போன்ற நீர்ப்பாசன வசதிகள் பயன்படுத்தப்பட்டு விட்டன. இதன் பயனாக பயிர் செய்யக் கூடிய நிலங்கள் அதிகமாக்கப்பட்டன. வட-மத்திய வியட்னாமில் பயிர் உற்பத்தியைப் பெருக்க பெரியதொரு திட்டம் வகுக்கப்பட்டுப் பல மக்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டனர். இம்முயற்சியால், 1945-ல் விளைந்ததைவிட, 37,300 டன் அதிகப்படியான அரிசி 1948-ல் விளைந்தது.

ஆக்ரமிப்புக்கு எதிராகப் போரை நடத்திக்கொண்டிருக்கும் மக்களின் நெஞ்சுறுதியும் இணையற்ற கூட்டுறவுமே இத்தகைய வெற்றிகளுக்குக் காரணம்.

தங்கள் விடுதலைக்காகப் போராடி வரும் வியட்னாம் மக்களின் உணர்ச்சியும், மன உறுதியும் ஒப்பிட்டுக் காட்ட முடியாதவையாகும். எனவே, வியட்னாம் வருங்காலத்தில், பெரும் சிறப்புறும் என்பது உறுதி.

இன்று வியட்னாம் மக்கள் பயன்படுத்தும் போர்க்கருவிகளுள் பெரும்பாலானவை, பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றியவைகளே ஓரளவு வியட்னாம் தொழிற்சாலைகளிலும் தயாராகின்றன.

எவ்வளவோ சங்கடங்களும் போக்குவரத்து வசதியின்மையும், வேலைத் திறமையுடைய ஆட்கள் போதிய அளவு இல்லாமலிருந்தும் வியட்னாம் தைரியத்தைக் கைவிடாமல், பிரதேச வாரியாக ஆயுதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வைத்துவிட்டன. இவற்றில், வெடியுப்புத் திராவகத்திலிருந்து பீரங்கிகள் வரை செய்யும் வேலைகள் நடைபெறுகின்றன.

வியட்னாம் மக்கள் வீடுகளிலே பல போர்க் கருவிகளைச் செய்கின்றனர். கைக்குண்டுகள் செய்தளித்துக் கொண்டிருந்த மக்கள் இன்று பறக்கும் ஷெல் குண்டுகளைச் செய்கின்றனர். வியட்னாம் மக்கள் செய்யும் போர்க் கருவிகள் பிரெஞ்சுக்காரர்களின் நவீனத் தொழிற்சாலைத் தயாரிப்புக் கருவிகளைவிட மிகச் சிறந்தவைகளாகவும், சக்தி வாய்ந்தவைகளாகவும் இருக்கின்றன என்று பிரெஞ்சுப் பத்திரிகைகளே கூற வேண்டிய நிலைக்கு வந்துவிட்டதென்றால், வியட்னாம் மக்களின் உழைப்பும் உற்சாகமும் எத்தகையனவென்பதைப் பாருங்கள்.

இன்று வியட்னாம் நாடு, எல்லாவகையிலும் தன் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. உணவு, இருப்பிடம், வாழ்க்கைக்கு வேண்டிய சாமான்கள், போர்க் கருவிகள் முதலிய எல்லாப் பொருள்களும் அங்கே, அந்நாட்டு மக்களுக்கு வேண்டிய அளவுக்கு மேலாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாடு பல சிறு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வப் பிரதேசம் எல்லாத் துறைகளிலும் தன்னைத்தான் சரிக்கட்டிக்கொண்டு போகுமாறு திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறெல்லாம் வியட்னாம் தலைவர் ஓஷிமின் வகுத்த திட்டங்களின் பயனாக, வியட்னாம் குடியாட்சியை எதிர்த்து நின்று போரிடும், பிறகு தொல்லைகளனைத்தும் வந்த பிரெஞ்சுக்காரர்கள் எதிலும் வெற்றிகாண முடியாமல் அடங்கினர். எனினும் அவர்களுடைய தொல்லைகளை அடியோடு ஒழித்துக்கட்டிவிட, வியட்னாம் தலைவர் ஓஷிமின் தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்.

திருமணம்

30—10—49 காலை 9 மணிக்கு சென்னை வண்ணையம்பதியில் தோழர் பழனிசாமிக்கும் தோழியர் பச்சையம்மாளுக்கும், மணமகன் இல்லத்தில், 3-வது வட்டம் நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் சி. வி. பாண்டியன் அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன், என். ஜீவரத்தினம், இராமசாமி ஆகியோர் சீர்திருத்த மணம் பற்றி சொற்பொழிவாற்றினர். “மாலைமணிக்கு” நன்கொடையாக ரூ. 5 மணமக்களால் அளிக்கப்பட்டது. மகிழ்ச்சி. (ஆ-ர்

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

1—11—49

புதுவயல் :— சி. என். அண்ணாத்துரை.
தர்மபுரி :— அ. சித்தையன்.

3—11—49

திருவொற்றியூர் :— சி. என். அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன், காஞ்சி. மணிமொழியார்.
புதுக்கோட்டை :— சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி.

அண்ணாமலைப் பல்கலைக் கழக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாணவர் பகுதி. "துரோகிகள்! பேதமூட்டுபவர்கள்! பிளவுபடுத்துபவர்கள்!" என்றெல்லாம தூற்றியது. அவர்களா துரோகிகள? அவர்களா குலலிங்குகள்? அவர்களா பின்னேடிகள்? சிந்தனை அறிவுள்ள எவனும் அப்படிச் சொலலமாட்டான உண்மையில, அவர்களின் செயலின்படி மதிப்பிடுவதானல், மாணவர் உலகின் மாசற்ற நற்பெயரைக் காப்பாற்றிய மாண்புடையவாகள் அவர்கள்!

மறுநாள் காலை அதே கும்பல் தடிகளையும், செங்கற் துண்டுகளையும் எடுத்துக் கொண்டு, தங்கள் கோரிக்கைக்குப் பணியவைக்க துணைவேந்தர் மாளிகை சென்றது நல்ல வேளையாக போலீசார் அவ்விடத்திற்கு விரைந்து பாதுகாப்பளித்தனர். அதைவிட முக்கியமானது பல அதிகாரிகளும், மற்றவர்களும் போலீஸ் உதவிக்கு விண்ணப்பியுங்கள் என்று வற்புறுத்தியும் கூட, துணைவேந்தா, போலீசாரின் உதவியை நாடவில்லை. இந்த நிகழ்ச்சி அவரின் எல்லையற்ற பொறுமையையும், மாணவர்களிடம் கொண்டிருக்கும் மட்டற்ற மரியாதையையும் விரிவுபட எடுத்துச் சொல்லும் இலக்கியமாகும்.

மாணவர்களிடம் தாறுமாருக இவர்கள் நடந்த பல சம்பவங்கள் உள்ளன. அப்படிப்பட்ட இவர்கள், பெண்களின் உரிமைக்குப் போராடுவதாக வேஷமிடுகின்றனர். கண்ணியமுள்ள எந்தப் பெற்ருேரும் சமூகத்தில் எந்த மனிதனினுடையவும் இத்தகைய பலாத்கார நடத்தையைக் கண்டிக்காமல் இருக்க முடியாது.

இவைகள் எல்லாம் அந்த மாணவர்களின் காட்டுமிராண்டித்தனமான. அநாகரிகமான, வெட்ககரமான செயல்களுக்கு சாட்சியம் கூறுகின்றன. இந்தப் பயங்கரக காட்சிகள் யாராலும் சகிக்க முடியாதவை. அப்படியிருக்க எதிர்காலத்தில் நாட்டின் நற்பண்புக்கு நாயகங்களாகவும், சமூகத்தின் கட்டுக்கோப்பின் பாதுகாவலர்களாகவும் விளங்கப் போகும் மாணவர்களால் எப்படிப் சகிக்க முடியும்?

படிப்பை, பலிபீடத்திலிட்டு. பெண்களை அவர்களின நிழலென தொடருவதற்கல்ல, எங்களுடைய பெறறேர், பிரயாசைப்பட்டு எங்களைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பியது.

இந்தச் சமூக விரோதிகளுடன் நாங்கள பங்குகொள்ளவில்லை என்பதை பொது மக்களுக்கும், பெற்றோர்களுக்கும மாணவர் சமூகத்திற்கும மிக மிக விளககமாகத் தெரியப் படுத்த விரும்புகிருேம விரும பத்தகாத இவர்களின செயல் களுககு ஆளாகிவிடக்கூடாது எனறு எல்லா மாணவர்களையும வேண்டுகிருேம். தவறைத் திருத்திக்கொள்வது, அந்தஸ்தை தாழ்த்துவதல்ல; மாருகப் பண்புள்ள மனிதன என்ற முறையில் பெருமையை உயர்த்துவது என்ற உணமையைத் தவறிய நமது சகோதரர்களுககு அன்பு மொழியிலே கூறுவோம்.

எங்கள் பொன்னுன நேரத்தையும், எங்கள் பெற்றோர்கள் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தையும் மீண்டும் விரயமாக்காமல், வகுப்புகளுக்குச் சென்று, எங்கள் நடைமுறை வேலைகளைத் தொடஙகுவது என தீர்மானித்திருக்கிருேம. சட்டதிட்டஙகளுக்குக் கட்டுப்பட்ட மாணவர்கள் அமைதியாகத் தொடர்ந்து தங்கள் பாடஙகளைப் பயிலுவதற்கு கலகக்காரர்களை ஒழுங்கு படுத்துமாறு அரசியலாரையும், பல்கலைக் கழக அதிகாரிகளையும் வேண்டுகிருேம்.

இந்தப் பழிச் செயல்களுக்கு காரணமாய் இருநதவர்களுக்கு நல்லறிவு நிலவட்டும்!

உண்மை என்றும்

வெற்றிபெற்றே தீரும்!
நேர்மையான செயலைச் செய்!

ஒன்று திரளுங்கள்! வகுப்புகளுக்குச் செல்லுங்கள்!
பாடங்களைப் பயிலுங்கள்!

தீயசக்திகளுக்குச் செவி சாய்க்காதீர்கள்!

இப்படிக்கு

சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்ட மாணவர்கள்.

செல்லாது

"தற்போதுள்ள அரசியல் நிர்ணயசபை மக்களுக்குப் பிரதிநிதித்வம் வகிக்காததால் அது வகுக்கும் அரசியல் செல்லாது"

—சரத்சந்திரபோஸ்

சென்னை ஆட்சிப்பீடம் கவனிக்குமா?

பீஹார் மாகிலக் கல்வியமைச்சர் அந்நாடு முழுவதும் உள்ள 2,30,00,000 முதியவர்களை 15 ஆண்டுகளுக்குள் படித்தவர்களாகச் செய்துவிடுவது என்று திட்டம் போட்டு, அதற்காக நாடெங்கும் பரவிய வகையில் 13,000 கல்வி நிலையங்களை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

சென்னை ஆட்சிப் பீடத்தார் என்ன செய்கின்றனர்? இந்த மாகாணத்திலே 100-க்கு 80 பேருக்குப் படிப்பில்லை. இந்த நிலையில், பல்கலைக்கழகமோ பட்டப் படிப்புகளுக்கு வைத்திருக்கும் அனுவசிய நிர்ப்பந்தங்கள் சொல்ல முடியாதவை. நாட்டிலுள்ள கல்வி நிலையங்களோ படிக்கும் ஆர்வமுடைய மக்களுக்கே போதிய அளவில்லை. முதியவர் கல்வி என்ற போரால் இங்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளோ தக்க அளவில்லை. எனவே, சென்னை ஆட்சிப்பீடத்தார் பீஹாரைப் பின்பற்றியாவது, சென்னை மாகிலத்தார் இந்நாட்டில் எல்லாவிடங்களிலும் முதியவர் கல்விக்கு ஏற்பாடு செய்ய முன் வர வேண்டுகிறோம்.

திராவிடர் வாலிபர் கழகம் பொன்மலை

பொன்மலை, அக். 28—

25—10—49 செவ்வாய் மாலை 6-30மணிக்கு கழகத்தோட்டத்தில் கழகத்தலைவர் தோழர் எம். நம்பிக்கைராஜ் அவர்கள் தலைமையில், நிர்வாகக்கமிட்டி கூட்டம் நடைபெறும என்று தி. க. அங்கத்தினர்களான தோழர்கள் (1) வடிவேலு, (2) பாக்கியநாதன், (3) டி. வி. சுப்பிரமணி, (4) டி. ஜோ (5) பர்ணாண்டஸ், (6) ஏ.என். ஜோக்கின், (7) கணேசன் ஆகியவர்களுக்கு ரிஜிஸ்டர் மூலம் தெரிவித்திருந்தும் கூட்டத்திற்குவாராதபோகவே பாக்கிஉள்ள தி. க. அங்கத்தினர்கள் 12 பேர்கள் வந்திருந்தார்கள். அதன் பிறகு 6-45மணிக்கு கழகத் தோட்டத்தில், கழகத் தலைவர் தோழர் நம்பிக்கை ராஜ் தலைமையில் தி.க. கூட்டம் நடைபெற்றது. அது சமயம் தோழர் வடிவேலுவைசேர்த்து 22-பேர்கள் போட்டு 12-10-49-ல் அனுப்பியிருந்த, நோட்டீசையும், பொன்மலை தி.வா.கழகசெயலாளர் என்ற பேரிலே, தோழர் டி. வி. சுப்பிரமணி என்று கையெழுத்திட்டு 15-10-49-ல் வந்த கடிதம் ஆகிய இரண்டையும் படித்துக் காண்பித்து அதன்பேரில் ஆலோசனை செய்து, பிறகு கீழ்ககண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியபின் செயலாளர் நன்றி கூறலோடு இரவு 7-30 மணிக்குக் கூட்டம இனிது முடிந்தது.

தீர்மானங்கள்:— (1) 13-7 49 பொன்மலை திராவிட வாலிபர்கழக நிர்வாகக் கமிட்டித் தீர்மானத்திற்கு விரோதமாக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களான தோழர்கள (1) வடிவேலு (2) பாக்கியநாதன், (3) சுப்பிரமணி, (4) ஜோக்கின், (5) பர்ணாண்டஸ் (6) ஜோ (7) கணேசன் ஆகியவர்கள் பொன்மலை திராவிட வாலிபர் கழகம் என்ற பெயரை வைத்து, வேறு புது கழகத்தை பொன்மலைப்பட்டியில் 13—10—49 ல் நாத பண்டிதர் இடத்தில் ஏற்படுத்தி, புது நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கப் போவதாகக் கழக நிர்வாகிகளுக்கு 12—10—49 ல் ரிஜிஸ்டர் கடிதமும், தேர்ந்தெடுத்ததாக 15—10—49-ல் ரிஜிஸ்டர் கடிதமும் வந்திருந்ததோடு, மேற்படி செய்கைகள் போலவே 25—9—49-ல் கழகத் தோட்டத்தில் நடந்த நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் யாதொரு எதிர்ப்பு நிர்மானம் இல்லாது இனிது முடிந்து வெளிவந்த பிறகு, கழகதோட்டத்திலேயே சட்டவிரோதமான கூட்டத்தைக் கூட்டி மேற்கண்ட நடவடிக்கைகளையே செய்ததானது கழக கவுரவத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும், ஒழுங்கு முறைக்கும் மீறின செய்கையாவதால், ஏன் கழக அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கக்கூடாது என்பதற்கு 20—10—49குள் எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கழகத்தலைவர் 12—10—49ல் ரிஜிஸ்டர் கடிதம் மேற்படி நிர்வாககமிட்டி அங்கத்தினர்கள் 7 பேர்களுக்கும் அனுப்பியிருந்தும், மதிக்காமல், அலட்சியப்படுத்தியிருந்த செய்கையை வெறுப்புக்காட்டிக் கண்டிப்பதோடு, மேற்கண்ட செய்கைகளானவை கழகக் கட்டுப்பாட்டிற்கும், ஒழுங்கு முறைக்கும் மீறின செய்கையாவதால்மேற்படிகழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் 7 பேர்களையும்கழகஅங்கத்தினர்பதவியிலிருந்தே நீககுவதெனவும், கழக அங்கத்தினர்களான தோழர்கள் (1) சந்திரசேகரன், (2) வி. கோபால், (3) எஸ். ஏ. துரைராஜ் ஆகியவர்கள் மேற்படி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் 7-பேர்களுடன் சேர்ந்து 12-10-49-ல் வெளிவந்த நோட்டீசில் பெயர்கள் இருப்பதோடு நடவடிக்கைகளிலும் கலந்து கொண்டு வேலைசெய்ததின் காரணமாக, மேற்படி கழக அங்கத்தினர்கள் 3-பேர்களையும் மேற்கண்ட காரணத்தால், கழக அங்கத்தினர் பதவியிலிருந்துநீக்கிவிடுவதுஎன்று இக்கூட்டம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

2. கழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் 7 பேர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, அங்கத்தினர் பதவியிலிருந்தே நீக்கிவிட்டபடியால், அடியில் கண்ட அங்கத்தினர்களை நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாக இக் கூட்டம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கிறது. (1) முத்துகிருஷ்ணன். (2) ஆர். நடராசன், (3) துரைசாமி.

3. 13-8-49 கழக நிர்வாககமிட்டி கூட்ட தீர்மானத்திற்குப்பிறகுமது கழகத்திற்கு கேடு விளைவிக்கும் முறையில் சில தோழர்கள் பல தொல்லைகளும், தொந்திரவுகளும் கொடுத்ததைத்தலைவர், செயலாளர் ஆகியவர்கள் தக்க முறையில் தடுத்து இதுவரையில் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் இக் கூட்டம் பாராட்டுவதோடு, ஏக மனதாகவும் ஏற்றுக்கொள்ளுகிறது.

4. இனி மேற்கொண்டு இது சம்பந்தமாக ஏற்படும் தகராறுகளுக்குத் தலைவர், செயலாளர் ஆகியவர்களே முழுபொறுப்பேற்று அப்போதைக்கப்போது நடவடிக்கைகளை எடுத்து நடத்திக்கொடுக்க இக் கூட்டம் தலைவர், செயலாளர் ஆகியவர்களுக்கு அதிகாரம் அளிக்க ஏக மனதாக ஒப்புக்கொள்ளுகிறதோடு, கழக அடிப்படை இலட்சியத்திற்கும் கொள்கைக்கும் முரண் இல்லாத வகையில் மேற்கொண்டு, கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்த்து தீவிரமாக கழக வேலை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது. என தோழர் ஏ. கோவிந்தசாமி எழுதுகிறார்.

எமது புதிய வெளியீடு!

மூவர்ண மேலட்டையுடன்
அண்ணாவின் அரிய நூல்கள்



★

	ரூ.	அ.
1858—1948	1	0
தீ பரவட்டும்	1	0
ரோமாபுரி ராணிகள்	2	4
கம்பரசம்	1	8
குமரிக்கோட்டம்	1	0
கற்பனைச் சித்திரம்	1	0
சிறு கதை	1	0
ஆரிய மாயை	1	0
உலகப் பெரியார்	1	0
ஜமீன் இனும் ஒழிப்பு	1	0
பணத்தோட்டம்	1	0
அறப்போர்	1	0
வர்ணஸ்ரமம்	0	12
ரேடியோவில் அண்ணா	0	12
நிலையும் நினைப்பும்	0	12
தாழ்ந்த தமிழகம்	0	8
மே தினம்	0	5
வானெலியில் அண்ணா	1	0
மொழிப் போராட்டம்	1	0

(இரா. நெடுஞ்செழியன்)

★

திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி P.O.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

சின்னசேலம்-நகரக்கிளை

சின்னசேலம், அக். 24—

16-10-49 ஞாயிறு மாலை 3-மணிக்குச் சின்னசேலம் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம், வள்ளலார் மிதிவண்டி நிலயத்தில் தி. க. தலைவர் சி. வாசுதேவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் நீண்ட சொற்போருக்குப் பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம்" பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவுடன் நிறுவப்பெற்றது. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—சி. வாசுதேவன்; துணைச் செயலாளர்-கே. சி. அப்பாராசு, பொருள் உறுப்பினர்-இஸ்மாயில் (K. U. H. M. & Sons) விளம்பர உறுப்பினர்-எ. அம்பாயிரம், என். சுப்பிரமணியம்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கே. பி. முத்துசாமி, எஸ் வீராசாமி, இஸ்மாயில், எம். அப்துல் ரஹீம், சி. கோவிந்தசாமி, ஏ. வி. ஆறுமுகம், சி. பிச்சையப்பன், ஆர். தாண்டவன், லோ. அருணசலம், மரியாநாதன். (வி-உ)

* * *

அச்சரபாக்கம்--சிற்றூர்க்கிளை

அச்சரபாக்கம், அக். 25—

24-10-49 மாலை திராவிடர் கழகத் தோழர்கள் டி. பி. இராசகோபால், தலைமையில் கூடி, திராவிடர் கழகத்திலிருந்து விலகி, "திராவிட முன்னேற்றக் கழகம்-அச்சரபாக்கம் கிளை" என நிறுவினர். பின்பு புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர், சி. சேகர்; துணைச் செயலாளர்:-டி. பி. ஆர். கோபால்; பொருள் உறுப்பினர்:—பி. எம். எஸ். முகம்மது, எ. வேணு.

விளம்பர உறுப்பினர்:—சி. கே. சம்பத்.

ஏனைய செயலுறுப்பினர்கள்:—எஸ். நடராசன், டி. பி. தேவன், அமீர், எ. நாராயணன், எஸ். நெடுமாறன்.

பிறகு கழகக் கொள்கைகளைப் பற்றித் தோழர் சேகர் விவரித்துப் பேசினர். துணைச் செயலாளர் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

* * *

சத்திரப்பட்டி—சிற்றூர்க்கிளை

சத்திரப்பட்டி, அக் 25—

23—10—49 மாலை 8 மணிக்கு திராவிடமணி இல்லத்தில், தோழர் பி. பழனியப்பன் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

பெரியாரின் பொருந்தாத் திருமணத்தையும், அதைக்கண்டித்தவர்களைக் குறித்து தூற்றுதல் மொழி கூறிய தன்மையையும் கண்டித்து ஒரு தீர்மானமும், தலைமைகழகத் திட்டங்களை ஏற்றுக்கொள்வதாக மற்றொரு தீர்மானமும், தி. மு. கழகம்-சத்திரப்பட்டி சிற்றூர்க்கிளை அமைப்பதென மற்றொருதீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—கே. பொன்னுக்காளை; துணைச்செயலாளர்—எ.முத்தப்பா; பொருள் உறுப்பினர்—பி. பி. ஜி. தேசிகன்; விளம்பர உறுப்பினர்—"சாக்ரடீஸ்." ஏனைய செயலுறுப்பினர்கள்—பி.பழனியப்பன், எஸ். எஸ். பிரகாசம், கே. சங்கரன், எஸ். இராசகோபால், எ.முத்துசாமி, கடற்கரை, ஜி. எஸ். மணி, எஸ். கே. சாமி, எ. குருநாதன். பின்பு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதுமுடிந்தது .(வி-உ)

* * *

பழனி—நகரக் கிளை

பழனி, அக். 25—

24-10-49 திங்கட்கிழமை இரவு 8-மணிக்குக் கழகக் கட்டிடத்தில், தோழர் கா. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—பழனி நகரக் கிளை" அமைக்கப்பட்டது. பின்னர் செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—ரா. ராதா; துணைச் செயலாளர்—கா. வெங்கடாசலம்; விளம்பர உறுப்பினர்—நா. அசன் முகம்மது; பொருள் உறுப்பினர்—ல. பழனிச்சாமி. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்—கே. தண்டபானி, ப. ரங்கசாமி, எம். எ. ராமசாமி, க. கருப்பணன், அ. தமிழரசு, முருகன், காளிமுத்து.

தோழர் கா. வெங்கடாசலம் இயக்க வேலைகள்பற்றிப் பேசினர். தோழர் அ. தமிழரசு நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

* * *

கூடக்கோயில்—சிற்றூர்க்கிளை

கூடக்கோயில், அக். 25—

24—10—49 திங்கள் காலை 9 மணிக்கு இவ்வூர் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் க. மூக்கையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க திராவிடர் கழகத்தைக் கலைத்து விடுவது என முடிவு செய்யப்பட்டது. பின்பு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் க. மூக்கையா அவர்கள் தலைமையில் அதே இடத்தில் நடைபெற்றது. தற்காலிக அமைப்பாளர்களாகத் தோழர்கள் வா. சி. முத்துசாமி, வெ. பெரியசாமி, செ. நடராசன், வா. கி. கிருட்டினன், க. செல்லம் (விளம்பரஉறுப்பினர்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கூட்டம் இனிது முடிந்தது. (வி—உ)

* * *

தண்டராம்பட்டு—சிற்றூர்க்கிளை

தண்டராம்பட்டு, அக். 25—

தண்டராம்பட்டு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் வீ. திருமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது போது "தி. மு. க. தண்டராம்பட்டு சிற்றூர்க்கிளை" நிறுவுவதென முடிவு செய்யப்பட்டு, புதிய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—வீ. திருமலை; துணைச் செயலாளர்-ர. ராமதேவ்; பொருள் உறுப்பினர்—என். ஆர். பால்; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்—வெ. துரைசாமி, து. கோவிந்தசாமி, ம. சு. ராதாகிருஷ்ணன், மா. கண்ணன், தேவராஜன், ஆ. சந்திரன். (செ—ர்)

* * *

மணப்பாறை-நகரக்கிளை

மணப்பாறை, அக். 25—

23-10-49-ம் நாள் அன்று மணப்பாறையில் தோழர் மு. தங்கநாயகம் அவர்கள் இல்லம் மேல்மாடியில், மாலை 6 மணிக்குத் தோழர் ச. சமுத்திரபாண்டியன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்ற அமைப்புக் கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்-மணப்பாறை நகரக்கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயலுறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்-ச. சமுத்திரபாண்டியன்; துணைச் செயலாளர்-அடைக்கலம்; நிதி உறுப்பினர்-மு. தங்கநாயகம்; விளம்பர உறுப்பினர்-அ. ஆறுமுகம்.

அதுபோது தோழர் வ. கதிர்வேல் அவர்கள் கழகக் கொள்கைகளைப் பற்றிப் பேசினர். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. (வி—உ)

* * *

வட ஆலப்பாக்கம்-சிற்றூர்க்கிளை

வ - ஆலப்பாக்கம் (திண்டிவனம்) அக். 25—

24—10—49 திங்கள் மாலை 7 மணிக்குத் திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம், கூடி, பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்துத் திராவிடர் கழகத்தைக் கலைப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் பொதுக்குழு உறுப்பினர் தோழர் எஸ். பூபாலன் அவர்கள் தலைமையில் கூடி, "திராவிட முன்னேற்றக்கழகம்— வடஆலப்பாக்கம் சிற்றூர்க்கிளை" அமைக்கப்பட்டது. மாவட்ட தி. மு. க. உறுப்பினர் தோழர் ஆ தங்கவேலு அவர்களால் தி. மு. க கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

புதிய செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது:—செயலாளர்:— ச. அ. ஆறுமுகம்; துணைசெயலாளர்:—து. ஏழுமலை, நிதி உறுப்பினர்:—செ. தருமன்; விளம்பர உறுப்பினர்:—சு. நாராயணசாமி.

ஏனைய செயலுறுப்பினர்கள்:—மூ வைத்திலிங்கம். கோ. சுப்பிரமணியன், கி. நடராசன். தோழர் து. ஏழுமலை அவர்களால் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

* * *

நாமக்கல்-நகரக்கிளை

நாமக்கல், அக. 26—

26-10-49-ல் நாமக்கல் சந்தைப் பேட்டை புதூர், திராவிட முன்னேற்றக் கழக நகரக் கிளை, நாமக்கல் பாறையில், தோழர் ஆர். தங்கவேலு அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. பின்பு செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்—ப. கருப்பன்; துணைச் செயலாளர்—மு. தியாகராசன்; பொருள் உறுப்பினர்—[illegible] இராசு; விளம்பர உறுப்பினர்: ப. பெருமாள். ஏனைய செயலுறுப்பினர்கள்—கா. செம்பு, மு. குன்றத்தாசன், ப. சுப்பண்ணன், ப. குருலிங்கம், மு. துரைசாமி, இன்னும் ஐந்துபேரை நிர்வாகக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ள செயலாளருக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. (வி-உ)

* * *

பேளுக்குறிச்சி-சிற்றூர்க்கிளை

பேளுக்குறிச்சி, அக். 25—

பேளுக்குறிச்சி திராவிடர் கழகச் செயற்குழுக்கூட்டம் 23—10—49 ஞாயிற்றுக்கிழமை மிட்டாதார் தோழர் சோமசுந்தரம் அவர்கள் இல்லத்தில், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. அதுபோது திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம—பேளுக் குறிச்சி சிற்றூர்க் கிளை" என்று மாற்றப்பட்டது. பின்னர் செயற் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்கள்:-ஜி. பி. சோமசுந்தரம், ஓ. கொ. ப சுப்பிரமணியம். துணைச செயலாளர்கள்-பி. பி. ராமசாமி, ஏ. பொன்னம்பலம். பொருள் உறுப்பினர்-கே. ரங்கசாமி. விளம்பர உறுப்பினர்—பி. எஸ். குப்பமுத்து, ஏனைய செயலுறுப்பினர்கள்—எல். முத்து, ஆர். ரங்கசாமி, பி. நடேசு, எஸ். கோவிந்தசாமி, பெருமாள், பி. பி. கோவிந்தராசு, கி. வெங்கடாசலம், கை. அத்தியப்பர், மிட்டார் சபாபதி, எஸ். சுலைமான், பி. ஆர். வேலப்பன், டி. சுகுணதீரன், பி. எ. துரைசாமி, பி. ரங்கசாமி, ஆர். பழனியாண்டி, ஆ. வீரப்பன், ப. நடேசன், அ. மாணிக்கம், பி. பொன்னுசாமி, அ. பழனிவேலு, பி. வரதராஜன்.

தலைவர் நன்றிகூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது. (வி—உ)

* * *

துலையாநத்தம்—சிற்றூர்க்கிளை

துலையாநத்தம், அக். 27—

26-10-49 மாலை 5-30 மணிக்கு முசிறிவட்ட துலையாநத்தம் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் வி. அண்ணாவி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது போது திராவிடர் கழகத்தை, "திராவிட முன்னேற்றக் கழகம்-துலையாநத்தம் சிற்றூர்க்கிளை" என மாற்றி அமைக்கப்பட்டது. செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-டி. பி. முத்துசாமி; உதவிச் செயலாளர்-எஸ். பொன்னம்பலம்; பொருள் உறுப்பினர்—ஏ. கருப்பண்ணன்; விளம்பர உறுப்பினர்—எ. சீனிவாசன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—கே. பூமாலை, எம். எருத்லான், வி. அண்ணாவி, என். ரத்தினம், எ. சுப்பிரமணியம், எஸ். ராமசாமி, ஆர். கிருஷ்ணசாமி. (வி-உ)

* * *

எட்டுக்குடி—சிற்றூர்க்கிளை

எட்டுக்குடி, அக். 27—

நாகை தாலுக்காவைச் சேர்ந்த எட்டுகுடி சிற்றூர் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 26-10-49-ல் நடைபெற்றது. அது போது கழகம் அமைக்கப்பட்டு, புதிய செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது.

செயலாளர்—கி. சுப்பையா; துணைச் செயலாளர்—மு. முருகையன்; பொருள் உறுப்பினர்—கி. கிருட்டினசாமி; விளம்பர உறுப்பினர்-கோ. சதாசிவம்; ஏனைய செயலுறுப்பினர்கள்—மணியன், ஜெயபால், சுந்தரசு, அ. இராமச்சந்திரன், எ. சுப்பிரமணியன், எம். இராமலிங்கம், ரா. வேணுகோபால். (வி—உ)

* * *

செம்பனார்கோவில்—சிற்றூர்க்கிளை

செம்பனார் கோவில், அக்.20—

15-10-49 சனிக்கிழமையன்று திராவிட இயக்கத் தோழர்களின் கூட்டம், தோழர் எம். ராமகிருஷ்ணன் அவர்களின் சிற்றுண்டி விடுதியில், தோழர் புருஷோத்தமன் அவர்கள் தலைமையில் கூடியது.

பெரியார் போக்கைக் கண்டித்தும் அண்ணாத்துரையைப்பொதுச் செயலாளராகக்கொண்ட தி. மு. கழகத்திற்கு ஆதரவு தந்தும்' "திராவிட முன்னேற்றக் கழகம்—செம்பனார் கோவில் சிற்றூர்க்கிளை, என நிறுவுவதென முடிவு செய்தும் தீர்மானங்கள் நிறைவேறறப்பட்டன.

செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது

செயலாளர்:—டி. பி. ஆறுமுகம் துணைச் செயலாளர்—கி. புருஷோத்தமன்; நிதி உறுப்பினர்—எம். ராமகிஷ்ணன், விளம்பரஉறுப்பினர்—க. சிதம்பரம்; ஏனைய செயலுறுப்பினர்கள்—ஜி. வெங்கடேசன், என். பி. கிருஷ்ணன், கோ. தம்பித்துரை, பி. தர்மு, எ. டி. எஸ். குப்புராமன், டி. கே. இராமலிங்கம், ச. கணபதி, எஸ். செல்வரெத்தினம், 16—10—49 மாலை 5 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகக் கொடியும் ஏற்றுவிக்கப்பட்டது.

* * *

புத்தரச்சல்-சிற்றூர்க்கிளை

புத்தாச்சல், அக். 25—

23—10—49 ஞாயிறு மாலை 5 மணிக்குப் புத்தாச்சல் தோழர் பி. நல்லசாமி அவர்கள் இல்லத்தில் தோழர் கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. அது போது "தி. மு. க.—புத்தாச்சல் சிற்றூர்க்கிளை" அமைக்கப்பட்டு, செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்--பி. கோவிந்தசாமி; நிதி உறுப்பினர்—கே. பழனிச்சாமி; விளம்பர உறுப்பினர்—பூ. தெய்வசிகாமணி; மற்ற உறுப்பினர்கள்—பி. நல்லசாமி, ர. ராமசாமி.

பின்பு செயலாளர் நன்றி கூறக் கூட்ட இனிது முடிந்தது. (செ-ர்)

திருவொற்றியூரில் தி. மு. க. துவக்க விழா

3—11—49 வியாழன் மாலை 5 மணிக்கு திருவொற்றியூர் சன்னதித் தெருவில் நடைபெறும். அதுபோது,

தோழர்கள்

சி. என். அண்ணாத்துரை,

கே. ஏ. மதியழகன்,

காஞ்சி மணிமொழியார்

ஆகியோர் சொற்பொழி வாற்றுவார்கள்.

தோழர் டி. சண்முகம் தலைமைவகிப்பார்.

பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றம்

வேண்டுகோள்

சென்னை, அக். 29—

பச்சையப்பன் கல்லூரி ஏழை மாணவர் நிதிக்காகக் கலைவிழா ஒன்று, நவம்பர 9-முதல் 15-வரை ஒரு வாரம் நடத்தபபடும். இவ் வாரத்தில் கல்லூரி மாணவ மாணவிகளின் இசையரங்கு, ஓரங்க நாடகப் போட்டிகள் நடைபெறும்.

நவம்பர் 13, 14—தேதிகளில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவாகளும் இசைவாணர் எம் கே. தியாகராஜ பாகவதா அவர்களும் முறையேநகைச்சுவை, இசையரங்கு நடத்துவதன் மூலம் இக்கல்வி நிதிக்கு உதவ ஒப்பியுள்ளனர்.

இவ்விழா சிறப்புற நடைபெறவும் 'ஏழை மாணவர் கல்வி நிதி' உயரவும் பெரும் பொருள் உதவி யாக்கு மாறு தமிழன்பர்களை மிகவும் வேண்டுகிறோம். எனப் பொதுச செயலாளர் தோழா க. அன்பழகன் அவர்களும, தலைவா தோழா மு. வரதராசன் அவாகளும் தெரிவித்திருர்கள்

சாத்தமங்கலம்

சாத்தமங்கலம், அக் 28-

26—1 —49ல் சாத்தமங்கலம் சிறறூர்க்கிளை தி. மு.கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் விருத்தாசலம் தோழர் சி. முனுசாமி அவர்கள் தலைமையில் மிக விமரிசையாக நடைபெற்றது. கூட்டத்துவக்கத்தில் நாட்டுப் பண் பாடலைத் தோழர் வி.பி கே. பெருமாள்பாடினர். பின்தோழர்கள், வைத்தியநாதன், பழனிக் கண்ணு, மு. கேசவன், இராமையா முதலியோர் முறையே, கொடியின் விளக்கம் திராவிடர் நிலை, மதமும் மக்களும், திராவிட முன்னேற்றக் கழகமும்—மாணவர் கடமையும் என்பது பற்றிப் பேசினர்கள் கடைசியாக சென்னை "திராவிடன்" ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகமும்—நமது கடமையும் என்பது பற்றி 1½ மணி நேரம் பேசினர். இரவு 9-30 மணிக்கு கூட்டம் முடிந்தது (வி உ.)

விளம்பரம்

ஒருபத்தி ஒருஅங்குலம் ரூ5—0—0 நீண்ட கால ஒப்பந்தவிளம்பரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.